Rare Dementia Support
Advice Community Learning

# ரேர் டிமென்ஷியா விளக்கங்கள்...

கூடுதல் தகவல்களுக்கு www.raredementiasupport.org



## ஃபிரண்டோடெம்பரல் டிமென்ஷியா (FTD)


என்பது மூளையின் முன்புறம் அல்லது பக்கங்களில் சேதம் ஏற்படுவதால், ஆளுமை மற்றும் நடத்தை அல்லது மொழி மற்றும் பேச்சு ஆகியவற்றை முக்கியமாகப் பாதிக்கும் டிமென்ஷியாக் குழுவாகும். இந்த நடத்தையானது **பிஹேவியரல் வேரியன்ட் ஃப்ரண்டோடெம்போரல் டிமென்ஷியா** அல்லது bvFTD என்று அழைக்கப்படுகிறது.

இதன் ஆறு முக்கியமான அறிகுறிகளாவன • **குறைக்கப்பட்ட மனத்தயக்கம் (reduced inhibition)** • **ஊக்கமிழப்பு (loss of motivation)** • **ஆட்டிப்படைக்கும் எண்ணங்களும் செயல்களும் (obsessions & compulsions)** • **உணவு நாட்ட மாற்றங்கள் (appetite changes)** • **பரிவு குண இழப்பு (loss of empathy)** • **திட்டமிடல், சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் முடிவெடுத்தலில் கஷ்டப்படுவது (difficulties planning, problem solving & decision making)**

மொழி வடிவமானது **பிரைமரி பிராகிரசிவ் அபாசியா** அல்லது PPA எனப்படுகிறது.

## ஃபமீலியல் ஃபிரண்டோடெம்பரல் டிமென்ஷியா (fFTD)

ஃப்ரண்டோடெம்போரல் டிமென்ஷியா நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டவர்களில் சுமார் 30-40% நபர்களைப் பொறுத்தவரை, இந்த நிலையின் குடும்ப வரலாறு உள்ளது என்பதால் ஒரு மரபணு காரணத்தைக் கொண்டிருக்கலாம் - இதை நாங்கள் ஃபமீலியல் FTD (fFTD) என்று அழைக்கிறோம். FTD-ன் பல்வேறு வடிவங்களுள், நடத்தை சார்ந்தவை பெரும்பாலும் மரபியல் வழி பெறப்பட்டவையாகும். பிரைமரி பிராகிரசிவ் அஃபாசியா, குறிப்பாக பிராகிரசிவ் நான்-ஃபுளூயன்ட் அஃபாசியா வடிவமானது, ஒரு மரபணு காரணத்தைக் கொண்டிருக்கலாம் மற்றும் குடும்பங்களில் மரபியல் வழி தொடரலாம் ஆனால் இது மிகவும் அரிதானது.



## பிரைமரி பிராகிரசிவ் அபாசியா (PPA)

என்பது ஒரு நபரின் பேச்சு மற்றும் மொழியை பாதிக்கும் டிமென்ஷியாக்களின் குழுவைக் குறிக்கும் சொல்.

இதன் மூன்று முக்கியமான வடிவங்களாவன • **பிராகிரசிவ் நான்-ஃபுளூயன்ட் அஃபாசியா** - பேச்சு மற்றும் வாக்கிய உருவாக்கத்தைப் பாதிக்கிறது

contact@raredementiasupport.org

Images ©2024 Alzheimer's Association. www.alz.org. All rights reserved. Illustrations by Stacy Jannis.

• **செமான்டிக் டிமென்ஷியா** வார்த்தைகளின் அர்த்தம் என்ன என்பதைப் புரிந்துகொள்வதைப் பாதிக்கிறது

• **லோகோபெனிக் பிராகிரசிவ் அபாசியா** வார்த்தையைக் கண்டறிதலைப் பாதிக்கிறது

**ரேர் டிமென்ஷியா விளக்கங்கள்...**




## போஸ்டீரியர் கார்ட்டிக்கல் அட்ரோபி (PCA)

என்பது மூளையின் பின்பகுதி சுருங்குவதால் ஆரம்பத்தில் பார்வைப் பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடிய (கண்பார்வை அல்ல மூளைப் பார்வை) டிமென்ஷியாவின் ஒரு அரிய வடிவமாகும்.

அறிகுறிகளில் அடங்குவன • **என்ன மற்றும் எங்கே என்று பார்ப்பதுடன் தொடர்புடைய காட்சி மற்றும் இடம்சார் பிரச்சனைகள்** • **கணக்கீடுகள், எழுத்துக்கூட்டல் மற்றும் எழுதுதலுடன் தொடர்புடைய கஷ்டங்கள்** • **பொருட்கள் எங்கே உள்ளன என்பதை செவியால் கேட்கும் மற்றும் உணருவதில் பிரச்சனை**

ஆரம்ப நிலையில் உள்ள கஷ்டங்களில் அடங்குவன: **வாசிக்கும்போது வாசிப்படத்தை மறப்பது** • **வாகனம் ஓட்டுவது மற்றும் பார்க்கிங் செய்வதில் பிரச்சனைகள்** • **வேலையில் பார்வைப் பிரச்சனைகள்**



## ஃபமீலியல் அல்சைமர் நோய் (FAD)

என்பது அல்சைமர் நோயின் மரபுவழிப்பெற்ற வடிவமாகும். இது குடும்பங்களுக்குள்ளேயே பாரம்பரியமாகத் தொடரும் மரபணுக் கோளாறால் ஏற்படுகிறது. FAD உடையவர்களுக்குப் பொதுவாக 65 வயதிற்கு முன்பே - பொதுவாக அவர்களின் 40 அல்லது 50 வயதுகளில் - அறிகுறிகள் ஏற்படுகின்றன. FAD இன் ஆரம்ப அறிகுறிகள் பொதுவாக வழக்கமான அல்சைமர் நோயைப் போலவே இருக்கும் - முதன்மையாக நினைவாற்றல் இழப்பு.

## யங் ஆன்செட் அல்சைமர் நோய் (YOAD)

பெரும்பாலும் வயதானவர்களின் நோயாகக் கருதப்பட்டாலும், அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 5% பேர் 65 வயதிற்குட்பட்டவர்கள். இது யங் ஆன்செட் அல்சைமர்ஸ் எனப்படுகிறது. இது பொதுவாக 40-கள், 50-கள் மற்றும் 60 வயதுகளில் உள்ளவர்களைத் தாக்குகிறது. பெரும்பாலான சமயங்களில் இது மரபுவழி வருவதில்லை. YOAD உடையவர்கள் பெரும்பாலும் மொழி, உணர்வு அல்லது நடத்தை மாற்றங்கள் மற்றும் நினைவகத்தில் சிரமங்களைக் கொண்டிருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.



## லெவி பாடி டிமென்ஷியா (LBD)

என்பது டிமென்ஷியா வித் லெவி பாடிஸ் மற்றும் பார்கின்சன் நோய் டிமென்ஷியா ஆகியவற்றை உள்ளடக்கும் ஒரு பொதுச் சொல்லாகும்.

முக்கிய அறிகுறிகளில் அடங்குவன • **சிந்தனை மற்றும் பகுத்தறிவு மாற்றங்கள், குறிப்பாக காட்சி சார்ந்த சிந்தனைகளை உள்ளடக்கியது** • **சிந்தனை மற்றும் நினைவகத்தில் ஏற்ற இறக்கங்கள் (பிரச்சினைகள் நாளுக்கு நாள் அல்லது மணிநேரத்திற்கு மணிநேரம் மாறுபடும்)** • **பார்வை மனமருட்சி (இல்லாதவற்றைப் பார்ப்பது)** • **மெதுவாக இருப்பது, விரைப்பாக இருப்பது மற்றும் விழுவது போன்ற இயக்கம்சார்ந்த மாற்றங்கள்** • **கனவில் வருவதுபோன்று உடலசைவு செய்யும் தூக்கக் கோளாறு**

**contact@raredementiasupport.org**

Images ©2024 Alzheimer's Association. www.alz.org. All rights reserved. Illustrations by Stacy Jannis.

contact@raredementiasupport.org

Images ©2024 Alzheimer's Association. www.alz.org. All rights reserved. Illustrations by Stacy Jannis.